TAMIL NADU
GOVERNMENT GAZETTE
PUBLISHED BY AUTHORITY

**No.46B] CHENNAI WEDNESDAY, NOVEMBER 26,2008**
**Karhigai 11, Thiruvalluvar Aandu-2039**

## Part VI --- Section 2
(Supplement)

**NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.**

---

# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

**2006ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் பகிர்மானத் (திருத்தம்) விதித் தொகுப்பு.**

**(அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ./DC/ 8–4, 22. 06. 2006 நாளிட்டது)**

**(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)**

தமிழ்நாடு மின் பகிர்மான விதித்தொகுப்பிலுள்ள ஒழுங்குமுறை விதியினைச் செயற்படுத்துவது பொறுத்து ஒருசில இடர்ப்பாடுகளை நீக்குவதற்கு மேற்சொன்ன விதித் தொகுப்பிலுள்ள ஒழுங்குமுறைவிதிகளைத் திருத்தம் செய்யும் ஒழுங்குமுறை விதிகளைப் பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும், மற்றும் மேலேயுள்ள நோக்கங்களுக்காக வகைசெய்கிற திருத்தங்கள் முந்திய வெளியீட்டின் வறையறைக்கு உட்பட்டிருத்தல் வேண்டும் மற்றும் அதற்கிணங்க அத்தகைய முந்திய வெளியீடுகள் செய்யப்பட்டுள்ளது என்பதாலும்,

தற்போது, அதற்காக, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 46ஆம் பிரிவுடன் சேர்த்துப் படிக்கப்படும் 181ஆம் பிரிவின் மூலம் அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன் பொருட்டு அதனை இயல்விக்கும் பிற அனைத்து அதிகாரங்களையும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இதன் மூலம், 2004 ஜுலை 21ஆம் நாளிட்ட அறிவிக்கை எண்.த.மி.ஒ.ஆ /DC/8/1—இன்படி பிறப்பிக்கப்பட்ட தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பிற்கு பின்வரும் திருத்தங்களைக் குறித்துரைத்துள்ளது மற்றும் 2004 செப்டம்பர் 1 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பகுதி VI – பிரிவு 2 (பின்னிணைப்பில்) இல் வெளியிட்டுள்ளது.

**“ 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் பகிர்மானத் (திருத்தம்) விதித் தொகுப்பு ’’**

**1.** **<u>குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்</u> :**

(a) இந்த விதித் தொகுப்பு “ 2006ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பு ’’ என்று வழங்கப்பெறும்.

(b) இந்த ஒழுங்குமுறைவிதிகள் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட நாளன்று நடைமுறைக்கு வரும்.

**2.** **<u>தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பில்,</u> –**

(a) 29ஆம் ஒழுங்குமுறைவிதியில், (13)ஆம் உள்—ஒழுங்குமுறைவிதியில் பின்வரும் குறிப்பு புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது :—

**<u>குறிப்பு 1</u>** – இந்த ஒழுங்குமுறைவிதியின் (12)ஆம் மற்றும் (13)ஆம் உள்—ஒழுங்குமுறைவிதிகளின்படி, குறித்த வகைத் தேவைக்கு இடைவெளிவிட

வேண்டும் என்பதை, நுகர்வோர் / கட்டிடம் கட்டுநர்கள் / கட்டிடத்தின் சொந்தக்காரர்கள், தொடக்கநிலையிலேயே தற்காலிக மற்றும் முறையான மின் வழங்கல் நீட்டிப்பிற்கான விண்ணப்பங்களுடன் அணுகும்போது அறிந்திருக்க வேண்டும்.

<u>குறிப்பு 2</u> – (தற்போது தலைவர் /தமிழ்நாடு மின்சார வாரியம்) மின்பகிர்மான உரிமம்தாரரின் தலைமை நிர்வாக அலுவலர் , –

(a) அத்தகைய வளாகத்திற்கு மின் வழங்கல் இருந்து வரும் மின் பகிர்மான மின்மாற்றிகள் / பிற ஆதாரங்களிலிருந்து திருப்தியளிக்கும் வகையில் அளிக்கப்பட்டிருந்தது என்று,

(b) எதிர்காலத்தில் அந்த வளாகத்தில் / அருகிலுள்ள இடங்களில் மின் சுமை அதிகரித்து மின் வழங்கலின் தரத்தை பாதிக்காது என்று,

(c) மேலேயுள்ள அளவை தளர்த்துவதனால் தொழில் நுட்பத் தேவைகளின் பேரில் விட்டுக் கொடுத்தல் எதுவும் செய்யப்படவில்லை என்று,

(d) போதிய இடவசதி இல்லாமை / இட ஆய்வுக்குப் பின்பு உரிமம்தாரரால் மாற்று வழிகள் உறுதி செய்யப்பட்டுள்ளது என்று,

அவர் திருப்தி அடைந்து, அசாதாரணமான சந்தர்ப்பத்தில், இந்த ஒழுங்குமுறைவிதியின் (12)ஆம் மற்றும் 13ஆம் உள்–ஒழுங்குமுறைவிதிகளில் குறிப்பிடப்பட்ட தேவைக்கு எதிராக தளர்த்துதல் செய்ய ஒப்புதலளிக்கலாம்.

(b) 42ஆம் ஒழுங்குமுறைவிதியில், முதலாம் வாக்கியத்தில், ‘‘கருதப்படும் நுகர்வோர் ’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘ கருதப்பட வேண்டிய நுகர்வோர், 29ஆம் ஒழுங்குமுறைவிதியின் (13) ஆம் உள்–ஒழுங்குமுறைவிதிக்குரிய குறிப்பு 1–இல் அடங்கியுள்ள வகைமுறைகளுக்கு உட்பட்டு’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

**[தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி]**

**இரா. பாலசுப்பிரமணியன்**
**செயலாளர்**